# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 12 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2025.09.18 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)

# இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல்

**வளவொன்றில் இருப்பாட்சியிலிருந்து ஆட்களை வெளியேற்றுவதிலிருந்து நிலக்கிழார் ஒருவரைத் தடுப்பதற்கும் மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு
அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 58.00** **தபாற் செலவு : ரூபா 150.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல்

ச.வ. – ஒ. 64/2023

**வளவொன்றில் இருப்பாட்சியிலிருந்து ஆட்களை வெளியேற்றுவதிலிருந்து நிலக்கிழார் ஒருவரைத் தடுப்பதற்கும்; மற்றும் அதனோடு தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1.** இச்சட்டம், 2025 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இருப்பாட்சியாளர்களைப் பாதுகாத்தல் சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

சட்டத்தின் ஏற்புடைமை

**2.** இச்சட்டத்தின் ஏற்பாடுகள் இச்சட்டத்தில், “இருப்பாட்சியாளர்” எனக் குறிப்பீடு செய்யப்படும் பின்வரும் ஆளொருவருக்கு ஏற்புடையதாதல் வேண்டும்.

(அ) வளவொன்றின் சட்டமுறையான இருப்பாட்சியில் இருக்கின்றவருக்கும்; அத்துடன்

(ஆ) பிரிவு 3, 4 அல்லது 5 இன்கீழ் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகளிற்கு முன்னர், மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதி ஒன்றிற்கு அத்தகைய வளவுகளில் குழப்பமற்ற இடையறா இருப்பாட்சியில் இருந்துள்ளவருக்கும்.

## பாகம் I

## இருப்பாட்சியாளர்களுக்கு அளிக்கப்பட்ட பாதுகாப்புக்கள்

நிலக்கிழார் வாழ்வசதிகளையும் வசதிகளையும் இடைநிறுத்துதலாகாது

**3.** எவையேனும் வளவுகளின் நிலக்கிழார், ஒன்றில் தானாகவோ அல்லது வேறு எவரேனும் ஆள் மூலமாகவோ-

(அ) இருப்பாட்சியாளருக்கு முன்னரே வழங்கப்பட்ட ஏதேனும் வாழ்வசதியை அல்லது வசதியை அல்லது ஏதேனும் அத்தியாவசிய வழங்கலை அல்லது பயன்பாட்டுச் சேவையினை இடை

நிறுத்துதலோ அல்லது நிறுத்தி வைத்திருத்தலோ ஆகாது; அல்லது

(ஆ) இருப்பாட்சியாளருக்கு முன்னரே வழங்கப்பட்ட ஏதேனும் அத்தியாவசியமான வழங்கல் அல்லது பயன்பாட்டுச் சேவையை, பழுதுபார்ப்பதற்கு அல்லது தகுந்த நிலையில் பேணுவதற்கு மறுத்தலோ, நிறுத்தி வைத்தலோ, தவறுதலோ அல்லது பழுதுபார்ப்பதற்கு அல்லது தகுந்த நிலையை பேணுவதற்கு அனுமதியளிக்க மறுத்தலோ ஆகாது.

**நிலக்கிழார் வளவுகளை சேதப் படுத்துதல் ஆகாது**

4. எவையேனும் வளவுகளின் நிலக்கிழார் அல்லது நிலக்கிழாரினால் அதிகாரமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள், ஒன்றில் தானாகவோ அல்லது வேறு எவரேனும் ஆளின் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, இருப்பாட்சியாளரை வளவுகளிலிருந்து வெளியேறும்படி தூண்டும் அல்லது கட்டாயப்படுத்தும் நோக்கில் வளவுகளை சேதப்படுத்துதலோ இடித்தலோ அல்லது மாற்றங்களைச் செய்தலோ ஆகாது.

**நீதிமன்றம் ஒன்றின் கட்டளை இன்றி இருப்பாட்சி யாளரை வெளியேற்று தலாகாது**

5. எவையேனும் வளவுகளின் நிலக்கிழார் அல்லது நிலக்கிழாரினால் அதிகாரிமளிக்கப்பட்ட வேறு எவரேனும் ஆள், இயைபான எழுத்திலான சட்டத்தின் நியதிகளின்படி நிலக்கிழாருக்கும் இருப்பாட்சியாளருக்கும் இடையில் செய்து கொள்ளப்பட ஏதேனும் குத்தகை உடன்படிக்கையில் அல்லது வாடகை தகுதி வாய்ந்த நீதிமன்றத்தின் உடன்படிக்கையின் நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அல்லது தீர்வையொன்று அல்லது கட்டளையொன்றினை மீறி நிலக்கிழாரினால் உப வாடகைக்கு விடும் அல்லது நிலக்கிழாரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் வளவுகளிலிருந்து அல்லது வளவுகளின் பாகமொன்றிலிருந்து, ஒன்றில் தானாகவோ அல்லது வேறு எவரேனும் ஆளின் மூலமாகவோ, இருப்பாட்சியாளரை வெளியேற்றுதலோ அல்லது வெளியேறச் செய்வித்தலோ ஆகாது.

## பாகம் II

## நிவாரணத்திற்காக வழக்கொன்றைத் தொடருதல்

**நிலக்கிழாருக்கு எதிராக இருப் பாட்சியாளர் வழக்குத் தொடருதல்**

6. (1) (இதனகத்துப்பின்னர், "பிரதிவாதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) எவையேனும் வளவுகளின் நிலக்கிழார், ஒன்றில் தானாகவோ அல்லது வேறு எவரேனும் ஆளின் மூலமாகவோ, நேரடியாகவோ அல்லது நேரடியாகவல்லாமலோ, 3ஆம், 4 ஆம்

அல்லது 5 ஆம் பிரிவில் குறிப்பீடுசெய்யப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட செயல்கள் அல்லது செய்யாமைகளை புரிகின்றவிடத்து, (இச்சட்டத்தில், "மனுதாரர்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய வளவுகளின் இன்னலுற்ற இருப்பாட்சியாளர், நியாயாதிக்கம் கொண்டுள்ள நீதிமன்றத்தில் செயலின் புரிதலை அல்லது செய்யாமையின் ஒரு மாதகாலத்தினுள், பின்வரும் நிவாரணங்களின் ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட கட்டளையை நாடி, வழக்கு எந்த ஏதுக்களை அடிப்படையாகக் கொண்டதோ அந்த ஏதுக்களின் தரப்பட்டதும் வேறு ஏதேனும் இயைபான விடயங்களுடன் சேர்த்து சத்தியக்கடதாசி ஒன்றின் மூலம் ஆதாரப்படுத்தப்பட்ட மனுவொன்றை சமர்ப்பிப்பதன் மூலம் வழக்கைத் தொடரலாம்:-

(அ) வாழ்வசதிகள், வசதிகள், அத்தியாவசிய வழங்கல்கள் அல்லது பயன்பாட்டுச்சேவைகளை மீட்டளித்தல் அல்லது அத்தகைய வாழ்வசதிகள், வசதிகள், அத்தியாவசிய வழங்கல்கள் அல்லது பயன்பாட்டுச் சேவைகளை தகுந்த நிலையில் பழுதுபார்ப்பதற்கு அல்லது பேணுவதற்கு அனுமதியை வழங்குதல்;

(ஆ) அத்தகைய வளவுகளின் இருப்பாட்சியாளர் மீது அல்லது அவருக்கு எதிராக ஏதேனும் பலாத்காரத்தை அல்லது வன்முறையை பயன்படுத்துவதிலிருந்து அல்லது பயன் படுத்துவதற்கான அச்சுறுத்தலிலிருந்து அல்லது ஏதேனும் தீங்கை, சேதத்தை அல்லது நட்டத்தை ஏற்படுத்துவதிலிருந்து அல்லது ஏற்படுத்து வதற்கான அச்சுறுத்தலிலிருந்து பிரதிவாதியை தடுத்தல்;

(இ) வளவுகளை சேதப்படுத்துவதிலிருந்து, அழிப்பதி லிருந்து அல்லது மாற்றம் செய்வதிலிருந்து பிரதி வாதியை தடுத்தல்;

(ஈ) வளவுகளின் வெற்றானதும் மற்றும் குழப்ப மற்றதுமான உடைமையினை மனுதாரர் மீட்டளித்தல்; அல்லது

(உ) நீதிமன்றத்தினால் தீர்மானிக்கப்படக் கூடிய வாறான வேறு ஏதேனும் நிவாரணம்.

(2) ஓராம் உட்பிரிவில் குறித்துரைக்கப்பட்ட நிவாரணத்தை நாடுகின்ற ஏதேனும் கட்டளைக்கு மேலதிகமாக, மனுதாரர் வளவுகளின் நிலவும் நிலையை பேணுவதற்கும் மற்றும் 3 ஆம், 4 ஆம் அல்லது 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகளை மீறி ஏதேனும் தவறான செயலைப் புரிவதிலிருந்தும் அல்லது வழக்கில் சட்டப்படிசெல்லாத இறுதித் தீர்ப்பை அளிக்கும் ஏதேனும் அத்தகைய தவறான செயலைப் புரிவதிலிருந்தும் பிரதிவாதியைத் தடுப்பதற்கும் இடைக்கால நிவாரணத்தைக் கோரலாம்.

நீதிமன்றம் மூலம் மனுவைக் கேட்டல்

**7.** (1) ஆறாம் பிரிவின்கீழ் வழக்குத் தொடுக்கப்படுவதன் மேல், மனுவில் முக்கிய நிகழ்வுகள் காட்சிப்படுத்தப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட சான்றிலிருந்து முதற்தோற்றளவில் தாபிக்கப்படுகின்றது என நீதிமன்றம் திருப்திப்பட்டால் அத்துடன் மனுதாரர் எந்த நிவாரணங்களை இறைஞ்சிக் கேட்டுள்ளாரோ அந்த நிவாரணங்களின் ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டதற்கு உரித்துடையவராக உள்ளார் என நீதிமன்றம் அபிப்பிராயப்பட்டால், அதன் பின்னர் நீதிமன்றம் பின்வரும் கட்டளையை ஆக்குதல் வேண்டும்:-

(அ) நைசைக் கட்டளை மூலம் குறித்துரைக்கப்பட்ட நாளொன்றில் பிரதிவாதி அக்கட்டளைக்கு எதிரான காரணங்களை காட்டாத பட்சத்தில், பயன்கொடுப்பதற்கு நிபந்தனை விதிக்கப்பட்டு அக்கட்டளையை ஆக்குதல் வேண்டும்; அல்லது

(ஆ) மனுவின் விடயத்தை தீர்மானிப்பதற்காக நாளொன்றைக் குறித்துரைக்கின்றதும் அத்துடன் அவ்வாறு குறித்துரைக்கப்பட்ட நாளில் அந் நோக்கத்திற்காக நீதிமன்றம் முன் பிரதிவாதி தோன்றியிருந்தால், அவர் மனுவிற்கு எதிராக கேட்கப்படுவார் என்பதனை அறிவிக்கின்றது மான இடைக்காலக் கட்டளையை ஆக்குதல் வேண்டும்.

(2) ஓராம் உட்பிரிவின் (அ) மற்றும் (ஆ) ஆகிய பந்திகளில் குறிப்பீடு செய்யப்பட்ட தேதி இயைபான கட்டளையை ஒப்படைப்புத் தேதியிலிருந்து பதின்னான்கு நாட்களுக்கு மேற்படாத தேதி ஒன்றாதல் வேண்டும்.

(3) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள் இப்பிரிவின் கீழ்

தொடங்கப்பட்ட எவையேனும் வழக்கு நடவடிக்கைகளுக்கு ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.

(4) (அ) இச்சட்டத்தின்கீழ் கட்டளை ஒன்றுக்கான ஏதேனும் விண்ணப்பம் விரைவாக கேட்கப்பட்டு தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றம் ஆனது, சத்தியக் கடதாசியின் உள்ளடக்கத்தையும் மற்றும் மனுவுடன் காட்சிப்படுத்தப்பட்ட அல்லது சமர்ப்பிக்கப்பட்ட சான்றையும் மட்டும் வைத்துத் திருப்திப்படுவதன்மேல், மனுத் தேதியிலிருந்து மூன்று மாதங்களினுள் கேட்பைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

(ஆ) பிரதிவாதி ஆட்சேபனைகள் பற்றிய கூற்றொன்றின் வாயிலாக எதிர்த்தரப்பில் கேட்கப்படுவதற்கு வேண்டுகோள் விடுக்கின்றவிடத்து, நீதிமன்றம், ஆட்சேபனை பற்றிய கூற்று நீதிமன்றம் பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து ஒன்பது மாதங்களுக்குப் பிந்தாமல் கேட்பைப் பூர்த்திசெய்தல் வேண்டும்.

எதிர்த்தரப்பில் கேட்கப்படும் விடயங்களில் கட்டளைகள் ஆக்கப்படுதல்

**8.** பிரதிவாதி நீதிமன்றம் முன்னர் தோன்றுகின்ற அல்லது 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி எதிர்த்தரப்பில் விசாரிக்கப்படுவதற்கு பிரேரிக்கின்றவிடத்தும் நீதிமன்றம் நைசைக் கட்டளை ஏன் பயன் கொடுக்கவில்லை என்பது பற்றிய போதுமான காரணம் உள்ளது என தீர்மானிக்கின்றவிடத்தும் நீதிமன்றம் நீதி தேவைப்படுத்தக்கூடியவாறாக பிரதி வாதியினால் கோரப்படும் அத்தகைய வழக்குச்செலவுகள், நிவாரணங்கள் மற்றும் செலவினங்களுக்கான கொடுப்பனவு பற்றி கட்டளை ஆக்கலாம்.

வாழ்வசதிகள் முதலியவற்றை மீட்டளிப்ப தற்கான கட்டளையுடன் இணங்கி யொழுகத் தவறுதல்

**9.** (1) எவையேனும் வளவுகளின் எவையேனும் வாழ்வசதிகள், வசதிகள், அத்தியாவசிய வழங்கல்கள் அல்லது பயன்பாட்டுச் சேவைகள் என்பவற்றை மீட்டளிப்பிற்காக நீதிமன்றம் நைசைக் கட்டளை ஒன்றை ஆக்குகின்றவிடத்து, நீதிமன்றம், அத்தகைய முறையேயான கட்டளையில் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் அத்தகைய நைசைக் கட்டளையுடன் பிரதிவாதி இணங்கி யொழுகத் தவறியிருப்பின், அத்தகைய நைசைக் கட்டளை அல்லது அடுத்துப்பின்னுறும் கட்டளை அதன்கண் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய முறையில் நிறைவேற்றப்படுதல் வேண்டுமென அதே கட்டளையில் அல்லது அடுத்துப் பின்னுறும் கட்டளையொன்றில் மேலும் கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

(2) பிரதிவாதி அத்தகைய நைசைக் கட்டளையுடன் இணங்கியொழுகத் தவறுகின்றவிடத்து, சொல்லப்பட்ட கட்டளை அத்தகைய நைசைக் கட்டளையில் அல்லது அடுத்துப்பின்னுறும் கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய முறையில், இறுதியாக ஆக்கப்படவேண்டிய நைசைக் கட்டளையை வழங்குவதற்கு மனுதாரரை தன்னியக்கத்தால் அல்லது விண்ணப்பத்தின்மீது நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

வளவுகளின் வெற்றான உடைமையை மனுதாரருக்கு மீட்டளித்தல்

**10.** (1) வளவுகளின் வெற்றான உடைமையை மனுதாரருக்கு மீட்டளிப்பதற்கு நீதிமன்றம் கட்டளையிடுகின்றவிடத்து, அந்நீதிமன்றம் ஆனது வளவுகளின் இருப்பாட்சியில் இருக்கின்றவர்களான எல்லோரையும் வெளியேற்றுவதன்மூலம் கட்டளையில் குறிப்பீடுசெய்யப்பட்ட வளவுகளின் வெற்றான உடைமையை மனுதாரருக்கு மீட்டளிப்பதற்கு பிசுக்கால் உடனடியாகக் கட்டளை இடுதல் வேண்டும்.

(2) வளவுகளின் வெற்றான உடைமையை மனுதாரருக்கு மீட்டளிப்புச் செய்வதற்கான இறுதிக்கட்டளை நிறைவேற்றத்தில் பிரதிவாதியினால் அல்லது வேறு ஆளினால் பிசுக்கால் எதிர்க்கப்படுகின்றவிடத்து அல்லது முட்டுக்கட்டை இடப்படுகின்றவிடத்து, அத்தகைய எதிர்ப்பு அல்லது முட்டுக்கட்டையின் பதின்நான்கு நாட்களினுள், இச்சட்டத்திற்கான அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டவாறு அத்தகைய படிவத்தில் நீதிமன்றத்திற்கு அத்தகைய எதிர்ப்பு அல்லது முட்டுக்கட்டை பற்றி அறிக்கையிடுதல் வேண்டும் என்பதுடன், நீதிமன்றம், அதன்மேல் அத்தகைய எதிர்ப்பு அல்லது முட்டுக்கட்டையினால் ஏற்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்புக்கு அவருக்கு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பது பற்றி அத்தகைய அறிவித்தல் தேதியிலிருந்து பதின்னான்கு நாட்களினுள் அவரை காரணங் காட்டும்படி தேவைப்படுத்துகின்ற எதிர்க்கின்ற அல்லது முட்டுக்கட்டையிடுகின்ற ஆளிற்கு எதிராக அறிவித்தல் ஒன்றை வழங்குதல் வேண்டும்.

(3) (அ) மனுதாரர் வெற்றான உடைமையை மீட்டளித்த பின்னர், மனுதாரர், வளவுகளை உடைமையாக்கிய தேதியிலிருந்து ஓராண்டு மற்றும் ஒரு நாள் காலப் பகுதியினுள் பிரதிவாதி அல்லது வேறு எவரேனும் ஆளினால் வளவுகளை உடைமையாக்குவதிலிருந்து அவர் தடைசெய்யப்படுகின்றவிடத்து அல்லது வெளியேற்றப்படுகின்றவிடத்து, மனுதாரர் அத்தகைய தடைசெய்யப்படுகின்ற அல்லது வெளியேற்றப்படுகின்ற தேதியிலிருந்து ஒருமாத

காலத்தின் எந்த நேரத்திலும் அதன்மீது மனு ஒன்றின்மூலம் நீதிமன்றத்திற்கு முறைப்பாடு ஒன்றைச் செய்யலாம், அம் மனுவில் பிரதிவாதி அல்லது அவரை தடைசெய்கின்ற அல்லது அவரை வெளியேற்றுகின்ற வேறு ஆள் பிரதிவாதிகளாகப் பெயரிடப்படுதல் வேண்டும்.

(ஆ) நீதிமன்றமானது (அ) என்னும் பந்தியின்கீழ் மனுவினைப் பெற்றுக்கொண்டதன்மேல், அத்தகைய மனுவின் பிரதி ஒன்றை பிரதிவாதிகளாக அதன்கண் பெயரிடப்பட்ட திறத்தவர்கள்மீது சேர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன், அத்தகைய தடை அல்லது வெளியேற்றத்தினால் ஏற்பட்டுள்ள நீதிமன்ற அவமதிப்புக்கு அவருக்கு ஏன் நடவடிக்கை எடுக்கக்கூடாது என்பதுபற்றி அத்தகைய கட்டளை தேதியிலிருந்து பதினான்கு நாட்களினுள் காரணங்காட்டும்படி அவர்களை தேவைப்படுத்துதல் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவு அல்லது (3) இன்கீழ் பிசுக்காலினால் ஆக்கப்பட்ட அத்தகைய அறிக்கையினை அல்லது மனுதாரரினால் கோப்பிடப்பட்ட மனுவை கேட்பதன்மீது, நீதிமன்றம்-

(அ) எந்த எதிர்ப்பு, முட்டுக்கட்டை, தடை அல்லது வெளியேற்றம் என்பன முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த எதிர்ப்பு, முட்டுக்கட்டை, தடை அல்லது வெளியேற்றம் தொடக்க மனுவிற்கான பிரதிவாதியினால் அல்லது அவரது தூண்டுதலின் பேரில் அல்லது அவர் சார்பில் வேறு எவரேனும் ஆளினால் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றும்;

(ஆ) எந்த எதிர்ப்பு, முட்டுக்கட்டை, தடை அல்லது வெளியேற்றம் என்பன முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதோ அந்த எதிர்ப்பு, முட்டுக் கட்டை, தடை அல்லது வெளியேற்றம் தொடக்க மனுவிற்கான பிரதிவாதி தவிர்ந்த வேறு ஆளொருவரினால் ஏற்படுத்தப் பட்டுள்ளதென்றும், அத்துடன் வளவுகளின் உடைமையில் இருக்கும் அத்தகைய ஆளின் உரிமைக் கோரிக்கை, அவரது

கணக்கிலிருந்தாலுஞ்சரி அல்லது தொடக்க மனுவிற்கான பிரதிவாதி தவிர்ந்த வேறு ஆளின் கணக்கில் இருந்தாலுஞ்சரி நல்லெண்ணத்துடன் செய்யப்படவில்லை என்றும்; அல்லது

(இ) பிரதிவாதியினால் அல்லது எதிர்ப்பு, முட்டுக் கட்டை, தடை அல்லது வெளியேற்றம் எவை யேனும் இருப்பின் அவற்றை ஏற்படுத்தியுள்ள ஆளினால் ஆக்கப்பட்ட உரிமைக்கோரிக்கை தாபிக்கப்பட்டிருக்கவில்லை என்றும்,

திருப்திப்படின், நீதிமன்றம் (5) ஆம் உட்பிரிவில் தரப்பட்டவாறு நடவடிக்கை எடுப்பதற்கு முற்படுதல் வேண்டும்.

(5) நீதிமன்றம் (4) ஆம் உட்பிரிவினைப் பின்பற்றி-

(அ) உடனடியாக மனுதாரருக்கு வளவுகளின் உடைமைகளை மீட்டளிப்பதற்கு பிசுக்காலைப் பணித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) நீதிமன்ற அவமதிப்புக்காக (4) ஆம் உட் பிரிவின் (அ) மற்றும் (ஆ) எனும் பந்திகளில் குறிப்பீடுசெய்யப் பட்டவாறு பிரதிவாதி அல்லது எதிர்ப்பு, முட்டுக் கட்டை, தடை அல்லது வெளியேற்றம் என்பவற்றை ஏற்படுத்தியுள்ள வேறு எவரேனும் ஆள் ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணத்திற்கு அல்லது ஓராண்டு காலப்பகுதியை விஞ்சாத மறியற்றண்டனைக்கு அல்லது குற்றப்பணம் மறியற்றண்டனை ஆகிய இரண்டினாலும் தண்டிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 303 ஆம் பிரிவின் ஏற்பாடுகள், எந்தத் தவறாளரின் மறியற்றண்டனைத் தீர்ப்பு இப்பந்தியின்கீழ் விதிக்கப்பட்டுள்ளதோ அந்த தவறாளர் தொடர்பில் ஏற்புடையற்பாலதாகாது.

(6) நான்காம் உட்பிரிவின் (இ) என்னும் பந்தியின்கீழ் தவறான உரிமைக்கோரிக்கை ஒன்றுடன் தொடர்புபடுகின்ற

ஏதேனும் வழக்கில், தவறாளர், குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன் மேல், ஐந்து இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணம் ஒன்றிற்கு ஆளாதல் வேண்டும்.

(7) இப்பிரிவின்கீழான ஏதேனும் வழக்கு நடவடிக்கையில், நீதிமன்றம் கருதக்கூடியவாறு கேட்பு மற்றும் எழுத்தாணை வழங்கல் என்பவற்றுக்கு உறப்பட்ட வழக்குச்செலவுகள், விதிப்பனவுகள் மற்றும் செலவுகள் பற்றி கட்டளை ஒன்றை ஆக்கலாம்.

இறுதிக் கட்டளையின் நிறைவேற்றுகை நிறுத்தி வைக் கப்படுதல் ஆகாது

**11.** (1) நீதிமன்றத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் இறுதிக் கட்டளையின் நிறைவேற்றுகையானது 12 ஆம் பிரிவின்கீழ் தகுதிவாய்ந்த உயரிய நீதிமன்றம் ஒன்றினால் ஆக்கப்பட்ட குறித்த நிறுத்திவைத்தல் கட்டளையானது இருந்தாலன்றி, நிறுத்தி வைக்கப்படலாகாது.

(2) நிறைவேற்றுகையை நிறுத்துவதற்கான கட்டளை ஒன்று எந்த மனுதாரரின் சார்பில் நீதிமன்றம் இறுதிக் கட்டளையை ஆக்கியுள்ளதோ அந்த மனுதாரருக்கான அறிவித்தல் இன்றி அத்தகைய உயரிய நீதிமன்றத்தினால் ஆக்கப்படலாகாது.

மேன்முறை யீடுகள்

**12.** இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் ஆக்கப்பட்ட இறுதிக் கட்டளை ஒன்றின் மூலம் இன்னலுற்ற எவரேனும் ஆள் குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் 754 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளின் நியதிகளின்படி மேன்முறையீட்டைச் செய்வதற்கு முன்வரலாம்.

பொருள் கோடல்

**13.** இச்சட்டத்தில் சந்தர்ப்பம் வேறு வகையாகத் தேவைப் படுத்தினாலான்றி –

"குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை" என்பது, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவை எனப் பொருள்படும்;

"நீதிமன்றம்" என்பது, நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள மாவட்ட நீதிமன்றம் எனப் பொருள்படும்;

எவையேனும் வளவுகளின் இருப்பாட்சியாளர் தொடர்பில் "வெளியேற்றுதல்" என்பது நிலக் கிழாருக்கும் இருப்பாட்சியாளருக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட குத்தகை

உடன்படிக்கையின் அல்லது வாடகைக் குடியிருப்பாளர் உடன்படிக்கையின் ஏற்பாடுகளை மீறி நிலக்கிழாரினால் உபவாடைக்கு விடும் அல்லது நிலக்கிழார்களினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் ஆளினால் அத்தகைய வளவுகளின் முழுமையான அல்லது ஏதேனும் பாகத்தைப் பயன்படுத்துவதற்கான அல்லது இருப்பாட்சி செய்வதற்கான தனது உரிமையை அத்தகைய இருப்பாட்சியாளர் நேரடியாக அல்லது நேரடியாகவல்லாத முறைகளைப் பயன்படுத்துவதன் மூலம் பறிப்பதாகும் எனப் பொருள்படும்;

“அத்தியாவசிய வழங்கல்கள் அல்லது பயன்பாட்டுச் சேவைகள்” என்பது, நீர் மின்சாரம், கழிவுநீர், சமையல் எரிவாயு என்பவற்றை வழங்குதல் மற்றும் நடைபாதைகள் மற்றும் படிக்கட்டுகள், மின்தூக்கிகள் என்பவற்றிலான மின்விளக்குகள் உட்பட்ட மின்விளக்குகள் மற்றும் மலசலகூட அல்லது சுகாதார சேவைகள் என்பவற்றை உள்ளடக்கும் எனப் பொருள்படும்;

எவையேனும் வளவுகள் தொடர்பில் “நிலக்கிழார்” என்பது, இருப்பாட்சியாளரிடம் இருந்து வளவுகளின் வாடகையை பெற்றுக் கொள்வதற்கு உரித்துடையவராக்கப்பட்ட ஆள் எனப் பொருள்படும் என்பதுடன் இது தொடக்க நிலக்கிழாரின் எழுத்திலான சம்மதத்துடன் வளவுகளை அல்லது அதன் ஏதேனும் பாகத்தை உபவாடகைக்கு விடும் இருப்பாட்சியாளரை உள்ளடக்குகின்றது;

“குத்தகைபெறுநர்" ஆனவர் 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப் பெறுதல் சட்டத்தில் உள்ளவாறான அதேபொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;

வளவொன்று தொடர்பில் அல்லது வளவொன்றின் ஏதேனும் பாகம் தொடர்பில் "இருப்பாட்சி" என்பது, குறித்த காலப்பகுதி ஒன்றுக்கு

நிலக்கிழாரின் சம்மதத்துடன் இருப்பாட்சியில் தொடர்ந்திருப்பதற்கு நிலக்கிழாருடனான குத்தகை உடன்படிக்கை அல்லது வாடகைக் குடியிருப்பாளர் உடன்படிக்கை ஒன்றின் கீழ் குத்தகை பெறுநர் ஒருவராக அல்லது வாடகைக் குடியிருப்பாளர் ஒருவராக அத்தகைய வளவுகளினுள் இருப்பாட்சி செய்துகொள்ளுதல் எனப் பொருள்படும்; அத்துடன்

“உடமை மற்றும் வளவுகள” என்பது, 2023 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, குத்தகைக்குக் கொடுக்கப்பட்ட வளவுகளின் உடைமையை மீளப் பெறுதல் சட்டத்தின் அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்

**14.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

**அட்டவணை**

[பிரிவு 10 (2)]

**படிவம்**

**எதிர்ப்பு மற்றும் முட்டுக்கட்டை பற்றி பிசுக்கால்மூலம் நீதிமன்றத்திற்கு அறிக்கையிடப்படுதல்**

……………………… மாவட்ட நீதிமன்றத்தின் நீதிபதிக்கு

……………………………… மாவட்ட நீதிமன்றத்தின் பிசுக்கால் …………… ……………….. ஆகிய நான் 20…… ஆண்டின் ………………. மாதம் ……. ஆம் நாளன்று ……………………………… என்னும் முகவரியைச் சேர்ந்த ……………………………………. என்பவர் (எதிர்ப்பு அத்துடன்/அல்லது முட்டுக்கட்டையை ஏற்படுத்திய பிரதிவாதியின் அத்துடன்/அல்லது வேறு எவரேனும் ஆளின் பெயர்), இதற்கான அட்டவணையில் குறிப்பீடுசெய்யப்பட்ட வளவுகளின் வெற்றுடைமையை …………………… ……………… என்பவருக்கு மீட்டளிப்பதற்கு (மனுதாரரின் பெயர்) 20……. ஆண்டின் …...………… மாதம் …… ஆம் நாளன்று ஆக்கப்பட்ட நீதிமன்றத்தின் இறுதிக்கட்டளையை நிறைவேற்றுகையில் …….……… …………..……. மூலம் எதிர்ப்பு அத்துடன்/அல்லது முட்டுக்கட்டை ஏற்படுத்தப்பட்டுள்ளது என இத்தால் நீதிமன்றத்திற்கு அறிக்கை இடுகின்றேன் (எதிர்ப்பு அத்துடன் அல்லது முட்டுக்கட்டை எந்தமுறையில் ஏற்படுத்தப் பட்டுள்ளது என்பதை விபரிக்கவும்)

<u>மேலே குறிப்பீடுசெய்யப்பட்ட வளவுகளின் அட்டவணை</u>

(கையொப்பமிடப்பட்டது) ……………………….

(பிசுக்காலின் பெயர்)

20…… ஆண்டின் ……….. மாதம் ……… ஆந்நாளன்று.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களம்.